அருங்காட்சியகங்களின் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு மா.அரவிந்த், இ.ஆ.ப.

செ.மு.ஆ.எண்.3437/2018/இ2 நாள்: 19.01.2024

பொருள் : பணியமைப்பு – அருங்காட்சியகங்கள் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – நேரடி நியமனம் – தொகுதி IV பணியிடங்கள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு அருங்காட்சியகங்கள் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு கு விவேக் ஆனந்த், இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரது கடித எண். 2379/PSD-H2/2020, நாள் : 13.10.2021.
2. அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் அவர்களின் செ.மு.ஆ.எண்.3256/2021/இ2, நாள்: 28.10.2021.

– – – – –

ஆணை,

பார்வை ( 1 ) இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரது கடிதத்தில் அருங்ககாட்சியகத்துறைக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவுசெய்து அனுப்பப்பட்ட திரு கு.விவேக் ஆனந்த் என்பவருக்கு பார்வை ( 2 ) இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு பணி நியமனம் செய்யப்பட்டு 18.11.2021 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். தற்போது விருதுநகர் அரசு அருங்காட்சியகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ( பணி வரையறைகள் ) சட்டம், 2016 ( Tamilnadu Government Servant ( Condition of Service ) Act, 2016 ) பிரிவு 28 (i)-இன்படி திரு கு விவேக் ஆனந்த், இளநிலை உதவியாளர் என்பவரது பணி 18.11.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவர் தொடர்ந்து மூன்றாண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்கு உட்பட்டு இரண்டு ஆண்டுகாலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயித்து ஆணையிடப்படுகிறது. இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் ( District Office Manual ) தேர்வு மற்றும் பவானிசாகர் அரசு பயிற்சி நிலையம் நடத்தும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை நிலைப் பயிற்சியினை முடித்து, தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னரே தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

ஒம்.......
ஆணையர்
(முழுக்கூடுதல் பொறுப்பு)

-//ஆணைப்படி//-

உதவி இயக்குநர் (நிர்வாகம்),
அரசு அருங்காட்சியகம், சென்னை-600 008.

பெறுநர் :
திரு கு விவேக் ஆனந்த், இளநிலை உதவியாளர், அரசு அருங்காட்சியகம், விருதுநகர்.

நகல் :
காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், விருதுநகர்.